திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, தில்லையாடி வள்ளியம்மை என்ற பெயர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மகாத்மா காந்தியின் உயிரை காப்பாற்றியவர்கள். அந்தப் பெயரின் பெருமையைக் காப்பாற்றுகின்ற வகையிலே அந்த வீடுகள் அனைத்தையும் இடித்துவிட்டு, புதிதாக நம்முடைய அரசாங்கம் நல்ல வீடுகளை கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, அத்தகைய எண்ணம் இல்லை.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக 'தாட்கோ'வால் கட்டப்படுகின்ற வீடுகள் அனைத்தும் ஒழுகுகின்றன. என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் தொண்டமானில் 37 வீடுகள் கட்டப்பட்டு அனைத்தும் ஒழுகிக்கொண்டிருக்கின்றன . . . .

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விகள் மூலக் கேள்வியை ஒட்டியதாக கேட்க வேண்டும்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சனை.

கொள்கை விளக்கக் குறிப்புகள் முன்கூட்டியே அளிக்கப் பெறுதல்.

*திரு. ரா. சுந்தரராஜ் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, ஒரு சப்மிஷன்; நாளையிலிருந்து இந்த மசோதாவின் மீது டிஸ்கஷன் ஆரம்பிக்க இருக்கிறது. அதனாலே இப்போதே சொல்லிவிடுகிறேன். போனதடவை இந்த பாலிசி நோட்ஸ்கள் எல்லாம் லேட்டாகக் கொடுத்தார்கள். ஆகையினால் அந்த பாலிசி நோட்ஸ்களை இந்த ஆண்டு 3 நாட்களுக்கு முன்னாலே கொடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இந்த பாலிசி நோட்ஸ்கள் எல்லாம் எங்கள் அறைகளுக்குத்தான் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் இப்போது எங்களுக்கு ஒரு சர்க்குலர் வந்துள்ளது. அதைநாங்கள் லைப்ரரிலே போய் கலெக்ட்

பண்ணிக்கொள்ள வேண்டும் என்று. அது சாத்தியம் இல்லை. எப்போதும்போல நடைமுறைப் பழக்கப்படி எங்களுக்குக் கொண்டு வந்து கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்ற முறை இப்படிப் பட்ட சில மானியக் கோரிக்கைகள் மீதான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்கள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று சில மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதாக எனக்குத் தகவல் கிடைத்தது. இங்கே அவையில் வைக்கப்பட்டவைகளை வேறு சிலர் எடுத்துச் சென்றும் விடுகின்றனர் என்பதும் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆகவேதான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளுக்கான புத்தகங்களை லைப்ரரி யில் வைத்து ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுத்துவிடுங்கள் என்று கூறினேன். மேலும், நேற்று இரவுதான் அரசுத் தரப்பில் இருந்து கொள்கை விளக்கக் குறிப்புகளுக்கான புத்தகங்கள் பெற்றன. இதிலே கொஞ்சம் காலதாமதம் ஆகியிருக்கிறது. அதற்குக் காரணம், முதலாவதாக வேளாண்மைத் துறை குறித்த மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதாக அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால், சில துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகளுக் கான விவாதங்கள் எடுத்துக்கொள்ள குறிப்பிட்டிருந்த தேதி களில் மாற்றம் செய்யவேண்டி ஏற்பட்டதால், இந்தக் கால தாமதம் ஏற்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர்களிட மிருந்து குறைபாடுகள் எதுவும் வராமல் இருக்கத்தக்க அளவிற்கு இவைகள் செய்யப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் அவையில் வைக்கவேண்டும் என்று விரும்பினால், அவையிலே வைப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, தயவு செய்து கடந்த முறை செய்ததைப் போல் உறுப்பினர்களுடைய அறை யிலே அந்த மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட புத்தகங்களைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று இரவுதான் கொள்கை விளக்கக் குறிப்புகள் கிடைத்ததால் அப்படிச் செய்ய முடியவில்லை. இப்போது தேவைப்படுகிற மாண்புமிகு உறுப் பினர்கள் நூலகத்தில் சென்று அதனைப் பெற்றுக்கொள்ளலாம். அப்படி பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவரவர்களுடைய அறையில் கொண்டு வந்து தர ஏற்பாடு செய்யப்படும்.